# D E P O S I T I O N O F W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.14/2025

**P.W**. 6(LW9)

| | |
|---|---|
| Name | : திரு.சுப்பிரமணி |
| Father/Husband Name | : திரு.கணேசன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வாலாஜாபாத்தில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 30.08.2023 அன்று அரசு பேருந்து TN 21 N 1882 என்ற பேருந்தில் நான் நடத்துனராக பணியில் இருந்தேன். அந்த பேருந்தில் ஓட்டுனர் சங்கர் பணி எண்.42839 ஓட்டுனராக இருந்தார். பேருந்தை கல்பாக்கத்திலிருந்து காஞ்சிபுரம் நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது மங்களம் பேருந்து நிறுத்திற்கு முன்பு சுமார் காலை 9.30 மணியளவில் திடீரென்று ஒரு சத்தம் கேட்டு பேருந்து ஓட்டுனர் பேருந்தை நிறுத்திவிட்டார். பேருந்துலிருந்து நான் கீழே இறங்கி பேருந்திற்கு முன்பு சென்று பார்த்தபோது ஒரு நபர் இரு சக்கர வாகனத்தில் பேருந்திற்கு

முன்னால் கீழே விழுந்து அடிப்பட்டு கிடந்தார். பேருந்தில் உள்ள பயணிகள் ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவ சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். நான் உடனே எனது பணி மனை மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னேன். காயம்பட்ட நபரின் பெயர் குமார் என்று தெரிந்துக் கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் 30 ஆண்டுகளுக்கு மேலாக நடத்துனராக பணியாற்றி வருகிறேன். பொதுவாக பணி மனையிலிருந்து பேருந்தை எடுப்பதற்கு முன்பு ட்ரிப்ஷீட் போடுவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவத்தன்று பேருந்தில் 60 முதல் 70 பயணிகள் இருந்தார்கள். சம்பவம் நடந்த இடத்திலிருந்து மங்களம் பேருந்து நிறுத்தம் சுமார் 100 மீட்டர் தான் இருக்கும் என்றால் சரிதான். மங்களம் பேருந்து நிறுத்தத்தில் இந்த பேருந்து நின்று செல்லும் என்றால் சரிதான். விபத்து நடந்த போது பேருந்து மிதமான வேகத்தில் தான் சென்றது என்றால் சரிதான். நான் பேருந்தில் பின்னால் உள்ள இருக்கையில் தான் அமர்ந்திருந்தேன். நான் பேருந்து நின்றபிறகு கீழே இறங்கி சென்று பார்த்த பின்பு தான் விபத்து பற்றி தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான். அப்போது பேருந்தில் பயணித்த பயணிகளும் வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் பேருந்தில் பின்னிருக்கையில் அமர்ந்திருந்ததால் விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தபோது ட்ரிட்ஷீட் நகலை அவர்கள் கேட்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபரின் பெயரை யார் எனக்கு

சொன்னார்கள் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth

J.M./TKM.